முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1091

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.09.2022**, சனிக்கிழமை

1. தவயோகியே அரங்கா போற்றி
தவசியாய் வாழும் தேசிகா போற்றி
அவனிகாக்கும் மகா சக்தியாக
ஆறுமுகன் என் வடிவாக வந்த குருராஜனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 07ம் நாள், 24.09.2022 சனிக்கிழமை)
ஆற்றல்பட அரங்கன் திருவடி பற்றி
அகிலத்தார் தொடர்ந்து வந்தால் போதும்
3. மாற்றங்கள் இந்த உலகில் தானாய் நடக்கும்
மாதர்மம் எங்கும் பரவி நிற்கும்
நிற்கவே அரங்கன் சார்ந்த மக்கள்
நிலவுலகில் ஞானியாவது உறுதிஉறுதி
4. ஏற்புகொண்டு அரங்கன் சன்மார்க்கத்தை
இவ்வுலகமெங்கும் பரப்பும் மக்களெல்லாம்
மக்களெல்லாம் மேலவர்கள் ஆசியோடு
மகான்களாக நிலைத்து உலகில் வாழ்வர்
5. வாழவே அரங்கன் மறையாக
வள்ளல் தர்மமாக வருகின்ற
ஊழ்வெல்லும் மகா சக்தியான
ஓங்காரக்குடிலின் அன்னதான சேவையை
6. சேவையை எவர் ஏற்று வருகின்றாரோ
சேவைக்குள் எவர் பொருளுதவி செய்கின்றாரோ
அவர்களெல்லாம் கலியில் ஞானிகளாக
அவரவர் கர்மவினை அகன்றோடி மாற்றம்
7. மாற்றம் தனை அரங்கனால் கண்டு சிறப்பர்
மாதவராஜரின் வழி ஞானியர்களாக தேறி
தேறியே கலியினில் ஞான ஆட்சி
தேசிகன் வழி தொடர்ந்து படைத்து சிறப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–